மோட்டார் வாகனக் காப்புறுதி

INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு

1.

மோட்டார் வாகனக் காப்புறுதி என்றால் என்ன?

மோட்டார் வாகனக் காப்புறுதி என்பது திடீர் விபத்தின் போது அல்லது வேறேதும் சேதங்களின் போது வாகனத்திற்கு ஏற்படும் இழப்பிற்கு வாகன உரிமையாளருக்கு நிதியியல் ரீதியான பாதுகாப்பினை வழங்குதல் ஆகும்.

2.

மோட்டார் வாகனக் காப்புறுதியின் தேவையென்ன?

பிரதான வீதியில் வாகனத்தை ஓட்டுவதற்கு எதிர்பார்க்கும் ஒவ்வொருவரும் மோட்டார் வாகனக் காப்பறுதியைப் பெற்றிருத்தல் வேண்டும். மோட்டார் வாகனச் சட்டத்திற்கு அமைவாக, செல்லுபடியாகும் காப்புறுதிப்பத்திரமொன்றின்றி வீதியில் வாகனத்தைக் கொண்டு செல்வது தண்டனை வழங்கக்கூடிய குற்றமாகும். குறைந்தபட்சம் மூன்றாம் தரப்பு காப்புறுதிப்பத்திரத்தையேனும் வைத்திருத்தல் கட்டாயமானதாகும்.

அதாவது மூன்றாம் தரப்பினருக்கு மட்டும் ஏற்படும் மரணம் அல்லது உடல் காயம்/ சேதம் தொடர்பான பொறுப்பு தொடர்பாக காப்புறுதி மோட்டார் வாகனச் சட்டத்திற்கு அமைவாக கட்டாயமானதாகும்.

3.

சந்தையில் கிடைக்கப்பெறும் மோட்டார் வாகனக் காப்புறுதி வகைகள் எவை?

பிரதானமாக சட்டத்தில் குறிப்பிடப்பட்ட மோட்டார் வாகனக் காப்புறுதி வகைகள் இலங்கைச் சந்தையில் கிடைக்கப்பெறுகின்றன.

- **மோட்டார் வாகனச்** சட்டத்திற்கு அமைவாக பிரதான/ குறைந்தபட்ச தரப்பினருக்கான காப்பீடு **(Act Only Policy)** – இதன் ஊடாக மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படும் உடற்காயம் மற்றும் இறப்புக் காப்பீடு கிடைக்கப் பெறும்.
- **மூன்றாம் தரப்பு மோட்டார் வாகனக் காப்புறுதி** - இதன் ஊடாக காப்புறுதி செய்யப்படுவது மூன்றாம் தரப்பினரின் உடற்காயம் அல்லது இறப்பு மற்றும் மூன்றாந் தரப்பினரின் சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்களாகும்.
- **மூன்றாம் தரப்பு, தீ மற்றும் களவு மோட்டார் வாகனக் காப்புறுதி** - இந்தக் காப்புறுதியின் ஊடாக காப்பீடு வழங்கப்படுவது, தீ மற்றும் களவு காரணமாக ஏற்படும் நட்டங்களுடன் மூன்றாம் தரப்பினரின் சொத்துக்கள் மற்றும் உடற்காயம் அல்லது இறப்பு தொடர்பாக மட்டுமேயாகும்.
- **முழுமையான மோட்டார் வாகனக் காப்புறுதி -** இந்தக் காப்புறுதியின் ஊடாக பொதுவாக காப்புறுதிதாரரின் வாகனம் அல்லது அதன் பகுதிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் தொடர்பாக ஏற்படும் நட்டங்கள்/ சேதங்கள் காப்பீடு செய்யப்படுவதுடன், சாரதியினால் ஏற்படும் விபத்து, உள்ளிருந்து தீப்பிடித்தல், வெளியில் வெடித்தல், இடியினால் ஏற்படும் தாக்குதல், களவு என்பவற்றினால் ஏற்படும் சேதம் மற்றும் மூன்றாம் தரப்பினருக்கு ஏற்படும் உடற்காயம், இறப்பு மற்றம் சொத்துக்களுக்கான நட்டங்கள் காப்புறுதி செய்யப்படும்.

4.

மோட்டார் வாகனக் காப்புறுதி வகைகள் மற்றும் காப்பீடுகள்

காப்புறுதிகள் / மோட்டார் வாகன காப்புறுதிப் பத்திரங்கள்	மூன்றாந் தரப்பு உடற்காயம் மற்றும் இறப்பு	மூன்றாந் தரப்பு சொத்துக்களுக்கு ஏற்படும் சேதங்கள்	தீ மற்றும் களவு போன்றவற்றால் ஏற்படும் சேதங்கள்	வாகன விபத்தினால் ஏற்படும் சேதங்கள்
மூன்றாந்தரப்பு சட்டத்தின் மூலமான காப்பீடு	✔	X	X	X
மூன்றாந்தரப்பு காப்புறுதி	✔	✔	X	X
மூன்றாந்தரப்பு தீ மற்றும் களவுக் காப்புறுதி	✔	✔	✔	X
முழுமையான மோட்டார் வாகனக் காப்பறுதி	✔	✔	✔	✔

5.

மோட்டார் வாகனக் காப்புறுதி தொடர்பாக கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் எவை?

- காப்புறுதியைப் பெற்றுக்கொள்வதற்கான உரிமை - வாகனத்தின் காப்புறுதி உரிமை அதன் தற்போதைய உரிமையாளருக்கே உள்ளது. அதனால் பயன்படுத்தப்படாத பதிவுசெய்யப்பட்ட வாகனத்தைக் கொள்வனவு செய்தவுடன் வாகனத்தின் உரிமையை உங்கள் பெயருக்கு மாற்றி உங்கள் பெயரில் காப்புறுதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுங்கள்.

- சந்தைப் பெறுமதி – மோட்டார் வாகனத்திற்கு காப்புறுதியைப் பெற்றுக்கொள்ளும் போது அல்லது இருக்கும் காப்புறுதியைப் புதுப்பிக்கும் போது வாகனத்தின் உண்மையான சந்தைப் பெறுமதிக்கு காப்புறுதிக் காப்பீட்டினைப் பெற்றுக்கொள்ளுங்கள். தற்போது நிலவும் சந்தைப் பெறுமதியை விடக் குறைவான பெறுமதியில் காப்புறுதி செய்யப்பட்டிருந்தால், கோரிக்கையின் போது ஏற்படும் நட்டத்தை விடக் குறைந்த தொகையே காப்புறுதி இழப்பீடாகக் கிடைக்கப்பெறுவதுடன், சந்தைப் பெறுமதியைவிட அதிக தொகைக்கு காப்புறுதி செய்யப்பட்டிருப்பினும், காப்புறுதி இழப்பீடுத்தொகை சந்தைப் பெறுமதிக்கு மட்டுப்படுத்தப்படும்.

- வாகனப் பாவனைக்குப் பொருத்தமான காப்புறுதிப்பூட்கை - வாகனத்தைப் பயன்படுத்துவது எந்நோக்கத்திற்காக என, அதாவது தனிப்பட்ட தேவைகளுக்கு, பயணிகளை அல்லது பண்டங்களைக் கொண்டு செல்வதற்கு, சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு பயிற்றுவதற்கு என வாகனத்தைப் பயன்படுத்துவதற்கான காரணத்தை காப்புறுதி முன்மொழிவில் குறிப்பிடுதல் வேண்டும். காப்புறுதிக் கொள்கை உரிமையாளர் கொடுப்பனவு செய்ய வேண்டிய தவணைக் கட்டணம் மற்றும் காப்புறுதிக் கொள்கைக்கான நிபந்தனைகள் என்பன தொடர்பான தீர்மானம் வாகனம் பயன்படுத்தப்படும் நோக்கத்தைக் கொண்டு எடுக்கப்படுவதனால், வாகனப் பாவனைக்கு உரிய காப்புறுதிப் பூட்கை பெறப்படாவிட்டால் காப்புறுதி நஷ்டஈட்டினைப் பெற்றுக்கொள்வதற்கான கோரிக்கை நிராகரிக்கப்படக்கூடும்.

அதே போல் காப்புறுதி ஆவணத்தில் குறிப்பிடப்பட்ட காப்புறுதி மற்றும் வெளியில் மேற்கொள்ளப்படும் காப்புறுதி பற்றி நன்றாக வாசித்து விளங்கிக்கொள்ளதல் வேண்டும் என்பதுடன் தமக்கு அவசியமான காப்பீட்டை மேலதிகத் தொகையைக் (Additional Premium) கொடுப்பனவு செய்தேனும் பெற்றுக்கொள்ளல் முக்கியமானதாகும்.

- **காப்புறுதி நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் உரிமை -** காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவில் பதிவுசெய்த பொதுவான காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடும் காப்புறுதி நிறுவனத்தின் ஊடாக அல்லது அதன் கீழ் பதிவுசெய்யப்பட்ட தரகர் நிறுவனத்திடமிருந்து மோட்டார் வாகன காப்புறுதியைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு குறித்தவொரு காப்புறுதி நிறுவனத்திடமிருந்து காப்புறுதிப் பூட்கையொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என யாரும் உங்களை வற்புறுத்த முடியாது.

- **விபத்து நிகழ்ந்ததும் உடனடியாக அறிவித்தல் -** வாகனம் விபத்துக்குள்ளானதும், அது தொடர்பாக உரிய காப்புறுதி நிறுவனத்திற்கு அறிவித்து உரிமையைப் பெற்றுக்கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய சரியான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல் முக்கியமானதாகும். சாரதியினால் விபத்து நிகழ்ந்தவுடன் அருகில் இருக்கும் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்தல் கட்டாயமானதாகும்.

- **ஒரு காப்புறுதிக் கொள்கையின் செல்லுபடிக் காலம் -** மோட்டார் வாகன காப்புறுதிப் பூட்கை வருடகாலத்திற்கு செல்லுபடியாகும். அந்தக் காலம் முடிவடைவதற்கு முன்னர் காப்புறுதிப் பூட்கையைப் புதுப்பித்துக் கொள்ளுதல் வேண்டும்.

மோட்டார் வாகனக் காப்புறுதியின் போது செய்யவேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை எவை?

6.

அ) செய்ய வேண்டியவை :

- ➢ உங்களுடைய மோட்டார் வாகனக் காப்புறுதிப் பூட்கையை பொதுக் காப்புறுதி வியாபாரத்தில் ஈடுபடும் பதிவுசெய்த காப்புறுதி நிறுவனத்திடம், அல்லது பதிவுசெய்த தரகர் நிறுவனத்திடம் அல்லது அதிகாரம் பெற்ற காப்புறுதி முகவரிடம் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- ➢ காப்புறுதி முன்மொழிவுப் பத்திரம் காப்புறுதிப் பூட்கையைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் நபரினால் பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். இதன் போது உண்மையான தகவல்களை உள்ளடக்குதல் முக்கியமானதாகும்.
- ➢ மோட்டார் வாகனத்தை எந்தத் தேவைக்கு பயன்படுத்துகின்றீர்கள் என்பதை தெரிவித்தல் காப்புறுதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் போது முக்கியமான விடயமாகும்.
- ➢ பூர்த்திசெய்த காப்புறுதி முன்மொழிவுப் பத்திரத்தின் பிரதியொன்றை வைத்துக்கொள்ளுங்கள்.
- ➢ காப்புறுதிப் பூட்கையின் ஊடாக காப்பீடு செய்யப்பட்டவை எவை மற்றும் செய்யப்படாதவை எவை என்பது தொடர்பாக தெரிந்து கொள்வதற்கு காப்புறுதிப் பத்திரத்தின் பிரதியொன்றினைப் பெற்று வாசித்தல் முக்கியமானதாகும்.
- ➢ மோட்டார் வாகனக் காப்புறுதிப் பூட்கையைப் பெற்றுக்கொள்ளும் போது அவசியமான மேலதிகக் காப்புறுதி ஏதுமிருப்பின், அது தொடர்பாக காப்புறுதி நிறுவனத்திடம் / காப்புறுதித் தரகரிடம் / காப்புறுதி முகவரிடம் தெரிந்துகொண்டு பொருத்தமான மேலதிக காப்புறுதியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
- ➢ காப்புறுதிப்பூட்கையைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் வாகனம் தொடர்பான ஏனைய ஆவணங்களை உரிய முறையில் இற்றைப்படுத்தல் வேண்டும்.

ஆ) செய்யக்கூடாதவை :

- ➢ வேறொரு வெளி நபருக்கு உங்களுடைய காப்புறுதி முன்மொழிவுப் பத்திரத்தைப் பூரணப்படுத்துவதற்கு வழங்க வேண்டாம்.
- ➢ காப்புறுதி முன்மொழிவுப் படிவத்தில் எந்தக் கூட்டையும் வெற்றிடமாக வைக்க வேண்டாம்.
- ➢ வாகனத்தின் உண்மையான பாவனை தொடர்பாக காப்புறுதி நிறுவனத்திற்கு பொய்யான தகவல்களை வழங்க வேண்டாம்.

மோட்டார் வாகனக் காப்புறுதிக் காப்பீடு எவ்வாறான இழப்புகளுக்கு வழங்கப்படும்?

7.

அங்கீகரிக்கப்பட்ட மோட்டார் வாகன காப்புறுதிப் பத்திரத்தின் ஊடாக பொதுவாக கீழ்வரும் இடர்களின் போது மோட்டார் வாகனத்திற்கு ஏற்படும் சேதங்களுக்கு **இழப்பீடு வழங்கப்படும்.**

- **வாகன விபத்து**
- **உள்ளே தீப்பற்றல்** (Fire)
- **வெளியில் வெடித்தல்**
- **இடிமின்னல் தாக்குதல்**
- **களவு** (Theft)

உங்களின் வேண்டுகோளின் பிரகாரம் மேலதிக கொடுப்பனவின் கீழ் மேலதிக காப்பீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன், அவற்றில் சில கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

- கலவரம் மற்றும் சிவில் யுத்தம், பயங்கரவாதச் செயல்கள் **(SRCC & T)**
- வெள்ளப்பெருக்கு மற்றும் இயற்கை இடர்களில் இருந்தான காப்பீட்டைப் பெற்றுக்கொள்ள முடியும்.

மோட்டார் வாகனக் காப்புறுதிக் காப்பீடு கிடைக்கப்பெறாத சந்தர்ப்பங்கள்.

8.

- வாகனச் சாரதிப் பத்திரம் இல்லாமல் வாகனத்தை ஓட்டும் போது ஏற்படும் சேதம்
- குடிபோதையில் வாகனத்தை ஓட்டுவதனால் ஏற்படும் சேதம்
- மோட்டார் வாகனத்தை சட்ட விரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதனால் ஏற்படும் சேதம்
- காப்புறுதிப் பத்திரத்தில் குறிப்பிடாத பாவனைக்கு மோட்டார் வாகனத்தைப் பயன்படுத்தும் போது ஏற்படும் சேதம்
- எஞ்சின் அல்லது ஏதேனும் தொழில்நுட்ப பிழை
- இலங்கை எல்லைப் பரப்பின் வெளியில் நிகழும் நட்டம் அல்லது இழப்பு

9.

உரிமைக் கோரிக்கையில்லாமையினால் கிடைக்கும் மிகையூதியம் (No Claim Bonus) என்றால் என்ன?

உரிமைக் கோரிக்கையில்லாமையினால் வழங்கப்படும் கழிவு என்பது காப்புறுதிப் பூட்கைக் காலப்பகுதியினுள் உரிமைக் கோரிக்கையை சமர்ப்பிக்காமை தொடர்பாக காப்புறுதியாளருக்கு வழங்கப்படும் நிதி ஊக்குவிப்பாகும். காப்புறுதிப் பூட்கையை புதுப்பிக்கும் பொழுது, அதற்கு முன்னர் உள்ள காலப்பகுதியினுள் காப்புறுதி உரிமைக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படாவிட்டால், புதுப்பித்தல் தவணைக் கட்டணத்தின் மீது உரிமைக் கோரிக்கை கழிவு வழங்கப்படும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை மேற்கொள்ளும் முறை

10.

காப்புறுதி தொடர்பான முறைப்பாடொன்றைச் சமர்ப்பிக்கும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு உள்ள அதிகாரத்தின் பிரகாரம் காப்புறுதியாளரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும் வகையில் முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படுவதுடன், அதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

முதலில் உங்கள் காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினைச் சமர்ப்பியுங்கள். காப்புறுதி நிறுவனத்திற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் வழிமுறையை அறிந்து கொள்வதற்கு https://ircsl.gov.lk/list-of-insurance-companies/ எனும் இணைய முகவரியில் உள் நுழையுங்கள். நிறுவனம் நியாயமான காலப்பகுதியினுள் அதனைத் தீர்த்து, அது தொடர்பான பதிலை வழங்குதல் வேண்டும்.

உங்களுக்கு காப்புறுதி நிறுவனத்தினால் நியாயமான காலப்பகுதியினுள் பதில் கிடைக்காவிடில் அல்லது முறைப்பாடு தீர்க்கப்பட்ட முறை தொடர்பாக நீங்கள் திருப்தியடையாவிடில், உங்கள் முறைப்பாட்டினை இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு அல்லது காப்புறுதி ஒம்புட்ஸ்மனுக்கு சமர்ப்பிக்க முடியும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாட்டினை சமர்ப்பிக்கும் முறைதொடர்பான மேலதிக தகவல்களுக்கு https://ircsl.gov.lk/policyholder-complaints/ எனும் இணைய முகவரியில் நுழையவும்.

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களுக்கு வழிகாட்டுதல்களை வழங்குவதற்காக மோட்டார் வாகனக் காப்புறுதி தொடர்பாக இந்த கையேடு வழங்கப்பட்டுள்ளதுடன், இதில் மோட்டார் வாகனக் காப்புறுதி தொடர்பான பொதுவான தகவல்கள் மட்டுமே உள்ளடங்கியுள்ளன. இதில் குறிப்பிட்டுள்ள விடயங்கள் காப்புறுதி பூட்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை பதிலீடுசெய்ய அல்லது இரத்துசெய்யமாட்டாது. காப்புறுதிப் பத்திரம் தொடர்பாக சரியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது வேறு விபரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காப்புறுதி நிறுவனம், காப்புறுதி தரகர் நிறுவனம் அல்லது காப்புறுதி முகவரைத் தொடர்புகொள்ளுங்கள்.

INSURANCE
REGULATORY
COMMISSION
OF SRI LANKA

சந்தைப்படுத்தல் அபிவிருத்தி மற்றும் வெளிவாரி தொடர்புப் பிரிவு
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
11 ஆவது மாடி, கிழக்கு கோபுரம்,
உலக வர்த்தக மையம், கொழும்பு 01.
தொலைபேசி - 0112 2396184-9 | பக்ஸ் - 0112 2396190
மின்னஞ்சல் - mder@ircsl.gov.lk

www.ircsl.gov.lk

https://www.facebook.com/Ircslofficialpage/

https://www.linkedin.com/in/insurance-regulatory-commision-of-sri-lanka-980722209/

https://www.youtube.com/channel/UCuM9RLGQTi7B2MM7PL7jfiA

பொறுப்பு மற்றும் துறப்பு

இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவினால் பொதுமக்களின் அறிவினை மேம்படுத்தும் நோக்கத்துடன் இந்த கைநூல் அச்சிடப்பட்டுள்ளதுடன், எந்தவிதமான சட்ட ஆலோசனைகளையும் வழங்குவதற்கு பதிலீடாக இதனைப் பயன்படுத்துதல் கூடாது.